# ஆயிரம் வருட அரசாட்சி ( பாகம் 2 )

# The Millennium – ( Part 2 )

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு! இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். வேதாகம ஆட்சி முறைக்காலங்களைப் பற்றியதான வேதபாடங்களில் இதற்கு முன்பாக ***சீக்கிரமாய் சம்பவிக்க வேண்டியவைகள்*** என்று *வெளி 22:6* ல் குறிப்பிடப்பட்டுள்ள, **சபை எடுத்துக்கொள்ளப்படுதல், அந்திக் கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அர்மகெதோன் யுத்தம், புறஜாதி மக்களுக்கான நியாயத்தீர்ப்பு, ஆயிர வருட அரசாட்சி ( பாகம் - 1)** போன்ற வேத பாடங்களை படித்தோம்.
இந்த வேதபாடத்தில் **தொடர்ச்சியாக ஆயிர வருட அரசாட்சியின் சில முக்கிய அம்சங்களைப்பற்றி** படிப்போம்.



**தாகமாயிருக்கிற யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவார்** *( ஏசாயா 32:5 எசே 36:25-27; யோவேல்2:28-32 ).*

*ஏசாயா 42: 3 தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்.*
*32:15 உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்; அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும்.*
வேதாகமத்தில் இதற்கு முன்பு பெந்தெகோஸ்தே நாளில், உபத்திரவகாலத்தில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டது போல இச்சமயத்திலும், பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவார். பலரும் பரிசுத்த ஆவியைப்பெற்றுக்கொள்வார்கள்.




**யூதர்கள் மீண்டும் உலகமுழுவதும் சுவிசேஷம் எடுத்துச்செல்லும் ஊழியக்காரர்களாக இருப்பார்கள்** *( ஏசா 2:2-4; 40:9; 52:7; 61:6; 66:18-21; சக 8:23 ).*

*ஏசாயா 66:19 நான் அவர்களில் ஒரு அடையாளத்தைக் கட்டளையிடுவேன்; அவர்களில் தப்பினவர்களை, என் கீர்த்தியைக் கேளாமலும், என் மகிமையைக் காணாமலுமிருக்கிற ஜாதிகளின் தேசங்களாகிய தர்ஷீசுக்கும், வில்வீரர் இருக்கிற பூலுக்கும், லூதுக்கும், தூபாலுக்கும், யாவானுக்கும், தூரத்திலுள்ள தீவுகளுக்கும் அனுப்புவேன்; அவர்கள் என் மகிமையை ஜாதிகளுக்குள்ளே அறிவிப்பார்கள்.*
யூதர்களில் எஞ்சி இருப்போர் எல்லா நாடுகளுக்கும் சென்று இயேசுவை இன்னும் அறியாமல் இருக்கிற மக்களுக்கெல்லாம் சுவிசேஷத்தை அறிவிப்பார்கள். தேவனுடைய மகிமையை அவர்களுக்கு எடுத்துரைப்பார்கள். யூதர்கள் உலக சுவிசேஷர்களாக மீண்டும் எழும்புவார்கள்.



**கர்த்தரைப்பற்றிய அறிவு உலகம் முழுவதும் வெளியரங்கமாக இருக்கும்** *( சக 8:22-23 )*

*ஏசாயா 11: 9 என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.*
எப்படி கடல் நீரால் நிறைந்திருக்கிறதோ அப்படி பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். அனைவருக்கும் தேவனைப்பற்றிய அறிவு இருக்கும். யூதர்களின் சுவிசேஷ ஊழியத்தினால் பூமி அனைத்தும் தேவனை அறிந்திருக்கும்



**உலகமெங்கும் ஒரே மதம் இருக்கும்** *(மல் 1:11; சக 14:16-21; ஏசா 2:2-4; யோவேல்2:28-31; எரே31:31-36 ).*

*மல்கியா 1 : 11 சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசை*

*வரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*



இன்று கிறிஸ்தவம் என்று பொதுவாக அழைக்கப்படுகிற இயேசுவின் சரீரமாகிய சபையில் இருந்து அனைத்து அழுக்குகளும், தவறான கோட்பாடுகளும், தத்துவங்களும் களையப்பட்டு, உலகமெங்கும் தேவனை வேதாகமத்தின்படி முறையாக ஆராதிக்கிற ஒரே மதமாக இருக்கும்.

## தேவனுடைய மகிமை தொடர்ந்து எப்போதும் வெளியரங்கமாயிருக்கும் *(எசா 4:4-6; 60:19; எசே 43:1-5 )*



*எசே 43:2 இதோ, இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கீழ்த்திசையிலிருந்து வந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போல இருந்தது; அவருடைய மகிமையினால் பூமி பிரகாசித்தது*

தேவனுடைய மகிமை கண்களால் காணும்படியாக இருக்கும். அவரது மகிமையினால் பூமி பிரகாசிக்கும்.

*ஏசாயா 4: 5 அப்பொழுது கர்த்தர் சீயோன்மலையிலுள்ள எல்லா வாசஸ்தலங்களிலும், அதின் சபைகளின்மேலும், பகலில் மேகத்தையும் புகையையும், இரவில் கொழுந்துவிட்டு எரியும் அக்கினிப்பிரகாசத்தையும் உண்டாக்குவார்; மகிமையானவைகளின்மேலெல்லாம் காவல் உண்டாயிருக்கும்.*

இஸ்ரவேல் ஜனம் வனாந்தரத்தில் வழி நடத்தப்பட்ட போது இருந்தது போல இப்போதும் மேகஸ்தம்பமும் அக்கினிப்பிரகாசமும் உண்டாயிருக்கும். இது எல்லோரும் தங்கள் கண்களால் காணும்படியாக வெளியரங்கமாக இருக்கும்.



## முழுமையான இரட்சிப்பு எல்லோருக்கும் கிடைக்கும்படியாக இருக்கும் *( யோவேல் 2:28-32; அப் 2:16-21; ஏசா 2:2-4; 11:9; 52:7; எபி 8-10 ).*

*ஏசாயா 52:7 சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன.*



உலக மக்கள் அனைவரும் இரட்சிப்பை பெற்றுக்கொள்ளும்படி இரட்சிப்பின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும். ஆதலால் எல்லோரும் இரட்சிக்கப்படும்படியாக ஏற்ற சூழ்நிலைகள் இருக்கும். இரட்சிக்கப்படாமல் இருப்பது மிகவும் அரிதாக இருக்கும்.

## தெய்வீக சரீர சுகம் எல்லோருக்கும் கிடைக்கும் *( ஏசா32:1-5; 33;24; 35:3-6; 53:5; மத்8:17; 1பேதுரு 2:24 ).*

*ஏசாயா 35:5 அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்.*

*6 அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்.*



சரீர சுகம் எல்லோருக்கும் கிடைக்கும். பொதுவாக மக்கள் நோய்வாய்ப்பட்டிருக்க மாட்டார்கள். அனைவரும் ஆரோக்கியமாக இருப்பார்கள். யாருக்கேனும் சுகவீனம் இருந்தால் இயேசுவால், பரிசுத்தவான்களால் சவுக்கியமாக்கப்படுவார்கள். இப்போது எங்கும் நாம் காண்கிற நோய்கள் ஒன்றும் ஆயிர வருட அரசாட்சியில் இருக்காது.

## உலகளாவிய சமாதானம் இருக்கும் *( ஏசா 2:4; 9:6-7; மல் 1:11 ).*

*மீகா 4:3 அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை*



*மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. 4 அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று.*

சண்டைகள், சச்சரவுகள், திருட்டு, வழிப்பறி, பகை, எல்லைத்தகராறு போன்றவை இல்லாமல் உலகம் முழுவதும் சமாதானமாக இருக்கும். ஒரு நாடு மற்ற நாட்டுடன் எந்த வித தகராறுக்கும் போகாது. போர் ஆயுதங்களுக்கு வேலை இருக்காது. அதனால் போராயுதங்கள் தயாரிக்க பயன்படும் உபகரணங்கள் அனைத்தும் விவசாயத்துக்கும் மற்ற வேலைகளுக்கும் தேவையான கருவிகள் தயாரிக்க பயன்படுத்தப்படும். எங்கும் சமாதானம் நிலவும். மக்கள் வசிக்கும், செல்லும் இடங்களில் எல்லாம் பயம் இல்லாமல் இருப்பார்கள். இப்போது இருப்பது போல பூட்டு, பெட்டகம் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் தேவை இல்லாமல் இருக்கும். வாசல் கதவுகளை திறந்து விட்டு மக்கள் சுதந்திரமாக செல்வார்கள்.



**உலகளாவிய செழிப்பு நிஜமாக இருக்கும்** ***( ஏசா 2:2-4; 65:20-25; மீகா 4:4-5).***

*எசாயா 65: 22 அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்துகொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்.*

*23 அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை; அவர்களும், அவர்களோடேகூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள்.*



எல்லோரும் வீடு, சொத்துக்களுடன் வசதியாக வாழுவார்கள். பணத்தட்டுப்பாடு அவர்களுக்கு இருக்காது. கிரெடிட் கார்டு, கடன் வாங்குதல் போன்ற ஒன்றும் இருக்காது. எல்லோரிடமும் தேவைக்கு அதிகமான செல்வம் இருக்கும். மக்கள் எவ்வளவு வேலை செய்கிறார்களோ அதற்கு உரிய பலனை பெறுவார்கள். உழைப்பு ஒன்றும் விருதாவாகப்போகாது. குடும்பங்களில் பிரச்சினை ஒன்றும் இல்லாமல் இருக்கும். மக்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாக இருப்பார்கள்.



**நிதி அமைப்பு இஸ்ரவேலில் இருக்கிறது போல இருக்கும்** ***( ஆதி 14:20; 28:22; எபி 6:20; 7:1-10; மத் 23:23: ரோமர் 2:22; 1 கொரி 9:7-18; 16:1-3; மல் 3:10-12).***

*மல் 3:10 என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

உலகத்தின் நிதி பரிபாலனம், தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறபடி இருக்கும். அதனால் எல்லோருக்கும் தேவையான செல்வம் இருக்கும். வேதாகமத்தில் தேவன் குறிப்பிட்டிருக்கிறபடி நிதி அமைப்பு இருக்கும். இயேசுவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் ஒருவருக்கும், ஒரு நாட்டுக்கும் நிதி பற்றாக்குறை இருக்காது.



**அனைவருக்கும் பொதுவான நீதி கிடைக்கும்** ***( ஏசா 9:6-7; 11:3-5; 65:20-25; 66:1-2; மத் 5:1-7:29).***

*ஏசாயா 11: 3 கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்;*




*அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி
தீர்ப்புச்செய்யாமலும்,* 4 *நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து,
யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத்
தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச்
சங்கரிப்பார்.* 5 *நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு
இடைக்கச்சையுமாயிருக்கும்.*

எல்லோருக்கும் முறையான நீதி கிடைக்கும். யாருக்கும் தவறான நீதி இழைக்கப்பட மாட்டாது. இயேசு கிறிஸ்து தன்னுடைய நீதியின்படி நீதி செய்வார். அதனால் எல்லோருக்கும் முறையான நீதி கிடைக்கும். யாருக்கும் பாராபட்சம் காண்பிக்கப்பட மாட்டாது.



## மனிதனின் வயது முடிவில்லாமல் இருக்கும் *(ஏசா 65:20-25; சக 8:4 ).*

***ஏசாயா* 65:20** *அங்கே இனி அற்ப ஆயுசுள்ளபாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான், நூறு வயதுள்ளவனாகிய பாவியோசபிக்கப்படுவான்.*

***சக* 8:4** *திரும்பவும் எருசலேமின் வீதிகளில் முதிர்வயதினாலே தங்கள் கைகளில் கோலைப்பிடித்து நடக்கிற கிழவரும் கிழவிகளும் குடியிருப்பார்கள்.*



இயேசு கிறிஸ்துவுக்கும், பரிசுத்தவான்களுக்கும் கீழ்ப்படிந்து, தேவனுடைய சட்டங்களின்படி வாழுகிற ஒருவரும் ஆயிர வருட அரசாட்சியில் மரிக்க மாட்டார்கள். 100 வயது உள்ள ஒரு மனிதன் சிறுவனாக கருதப்படுவான். மனிதனை முதுமையாக்குகிற மரணம், நோய், துன்பம், வேதனை, கண்ணீர், வறுமை போன்ற ஒன்றும் இல்லாததால் மனிதன் **1000** வருடம் முழுவதும், அதன் பின்னாலும் வாழ முடிகிற சூழ்நிலைகள் இருக்கும். யாராவது மரணத்துக்கு ஏதுவான குற்றம் செய்தால் **அவர்களுக்கு மரண தண்டனை** கொடுத்து கொல்லப்படுவார்கள் *( ஏசாயா 11:3-5; 9:6-7 ).* மற்ற அனைவரும் நெடு நாள் வாழுவார்கள். மனித வாழ்வு மரங்களைப்போல நீடித்திருக்கும் *( ஏசாயா 65:22 ).*

## கோள்களில் இருந்து வரும் வெளிச்சம் 7 மடங்காக அதிகரித்திருக்கும் *( ஏசா 30:26; 60:18-22 ).*

***ஏசாயா* 30:26** *கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக் கட்டி, அதின் அடிக்காயத்தைக் குணமாக்கும் நாளிலே, சந்திரனுடைய வெளிச்சம் சூரியனுடைய வெளிச்சத்தைப்போலவும், சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப்போலவும் இருக்கும்.*



ஆயிர வருட அரசாட்சியின்போது இப்போது இருக்கிறது போல இருள் இருக்காது. இரவில் சந்திரனுடைய வெளிச்சம் இப்போது இருக்கிற சூரிய வெளிச்சம் போல இருக்கும். சூரியனுடைய வெளிச்சம் ஏழு பகல்களின் வெளிச்சத்தை கூட்டினால் எவ்வளவு இருக்குமோ அவ்வளவாக இருக்கும். அனைத்து நாட்களும் பிரகாசமான நாட்களாக இருக்கும்.

## மிருகங்களின் குணம், மனிதனின் வீழ்ச்சிக்கு முன்பு இருந்தது போல மாறி இருக்கும் *(65:17 - 25; ரோமர் 8:18-23).*



***ஏசா* 11:6** *அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி
வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும்,
காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்.* 7
*பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப்
படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்.* **8** *பால்
குடிக்குங்குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த
பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்.*



இப்போது மாமிச பட்சிணிகளாக இருக்கும் அனைத்து விலங்கினங்களும் அப்போது தாவர பட்சிணிகளாக இருக்கும் *( ஏசாயா 66:25 ).* அவைகள் ஒன்றுக்கொன்றுடனும், மனிதனுடனும் அன்பாக பழகும். மனிதனின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். மனிதனின் வீழ்ச்சிக்கு முன்பு இருந்தது போல அவைகளின் குணம் இருக்கும்.



### ரோஜாப்பூ போல வனாந்திரங்கள் மீண்டும் செழிக்கும் *( ஏசா 35:1-0; 55:12-13; எசே 36:8-12; யோவேல் 2:18 - 27; 3:17-21; ஆமோஸ் 9:13-15 ).*

*ஏசாயா 35: 1 வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும். 2 அது மிகுதியாய்ச் செழித்துப் பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல்சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்; அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்.*

வனாந்திரங்கள், வெட்டாந்தரைகள், வறண்ட நிலங்கள் போன்றவை இருக்காது. எல்லா நிலங்களும் விளைநிலங்களாக, நல்ல நிலங்களாக மாறும். வனாந்திரங்கள் ரோஜாப்பூக்களைப்போல செழிப்பாக மாறும்.

பூமி முழுவதும் மனிதர்கள் வசிப்பதற்கு ஏற்றதாக இருக்கும்.

இப்போது பாவத்தின் சாபத்துக்குள்ளாகி இருக்கும் இயற்கை, இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி காத்திருக்கின்றது *( ஏசாயா 55:12-13; ரோமர் 8:19; சங் 96:11-13; 98:7-9 ).* அப்போது இயற்கையின் மேல் உள்ள பாவத்தின் சாபம் நீக்கப்பட்டு விடுதலையாக்கப்படும். தங்கள் மேல் உள்ள சாபம் நீக்கப்பட்டதாலும், மனிதருக்கு கொடுக்கப்படும் ஆசீர்வாதங்களை பார்ப்பதாலும், இயற்கை முழங்கி கைதட்டி ஆர்ப்பரிக்கும்



*ஏசாயா 55:12 நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டு, சமாதானமாய்க் கொண்டுபோகப்படுவீர்கள்; பர்வதங்களும் மலைகளும் உங்களுக்கு முன்பாகக் கெம்பீரமாய் முழங்கி, வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும்.*

### நியாயம், அன்பு, நீதி, சமாதானம், சுகம் மேலோங்கி இருக்கும் *( ஏசாயா 9:6-7; 11:5; 32:1-5; 65:17-25 ).*



*ஏசாயா 32: 16 வனாந்தரத்திலே நியாயம் வாசமாயிருக்கும், செழிப்பான வயல்வெளியிலே நீதி தங்கித்தரிக்கும். 17 நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்.*
*18 என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்.*

இயேசுகிறிஸ்துவின் நீதியான, நிலையான, கண்டிப்பான, அன்பான ஆட்சியினால் உலகமெங்கும் நியாயம், அன்பு, நீதி, சமாதானம், சுகம் மேலோங்கி இருக்கும். எங்கும் சமாதானம் நிலவும். வாழ்க்கை சுகமாக இருக்கும்.



### உலக மக்கள் இயேசுவுக்கும், பரிசுத்தவான்களுக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்

*(சங் 2; வெளி 2:26-27; 5:10; 11:15; 12:5; 20:1-10 ).*

*வெளி 2:26 ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். 27 அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள்.*

இயேசுகிறிஸ்துவும், பரிசுத்தவான்களும் பிதாவின் சட்டங்களின்படி நீதியாய் ஆட்சி செய்வார்கள். மனிதர்கள் இயேசுவுக்கும், பரிசுத்தவான்களுக்கும், அவர்கள்



கொடுக்கும் சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். கீழ்ப்படியாதவர்களுக்கு கடுமையான தண்டனைகள் கொடுக்கப்படும். மனிதர்களுக்கு இருக்கும் பிரதான கடமை இயேசுவுக்கும் பரிசுத்தவான்களுக்கும் கீழ்ப்படிந்து இருப்பது.

### இஸ்ரவேலில் கனிதரும் காலம் எப்போதும் இடைவிடாமல் தொடர்ந்து இருக்கும் *( ஏசா 30:23-25; 33:20-21; 35:6-7; 41:17-18; 49;10; எசே 34:26; 47:1-12; சக 14:8 ).*



*எசே 47:12 நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரையிலும் புசிப்புக்கான சகலவித விருட்சங்களும் வளரும்; அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை; அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும்; அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்குமானவைகள்.*

எருசலேமின் தேவாலயத்தில் இருந்து புறப்படும் நதியின் இருபுறமும் வளமாக இருப்பதால் கனிதரும் காலம் எப்போதும் இருக்கும். இப்போது இருப்பது போல அல்லாமல், மரங்களில் எப்போதும் கனி இருக்கும். மாதந்தோரும் புது கனிகள் உருவாகும். கனிகள் கெட்டுப்போகாமல் மரத்தில் இருக்கும்.

### தேவையான தண்ணீர் வளம் இருக்கும் *( ஏசாயா 41:18 )*



*ஏசாயா 30:25 கோபுரங்கள் விழுகிற மகா சங்காரத்தின் நாளிலே, உயரமான சகல மலைகளின்மேலும், உயரமான சகல மேடுகளின்மேலும் ஆறுகளும் வாய்க்கால்களும் உண்டாகும்.*

“ **மகா சங்காரத்தின் நாள்** “ என்பது அர்மகெதோன் யுத்தத்தை குறிக்கிறது. அர்மகெதோன் யுத்தத்துக்கு பிறகு ஆயிர வருட அரசாட்சியில் மலைகளில் இருந்து எல்லாம் ஆறுகளும், வாய்க்கால்களும் புறப்படும். இதனால் பூமியெங்கும் ஏராளமான ஆறுகள் ஓடும். அதனால் பூமி செழிப்பாக இருக்கும். தண்ணீர் தட்டுப்பாடு என்ற ஒரு காரியம் இருக்காது.

### பூமியெங்கும் பௌதீக ஆசீர்வாதங்கள் நிறைந்திருக்கும் *( ஏசா 29:17; 30:23-24; 32:15; 35;1-7; 41:19; 49:9-10;51:3; 55:13; 60:5-17; 62:8-9; எரே 31:27-28; எசே34:27; 36:25-35; யோவே 3:18; ஆமோஸ்9:13 ).*



*ஏசாயா 30:23 அப்பொழுது நீ நிலத்தில் விதைக்கும் உன் விதைக்கு அவர் மழையையும், நிலத்தின் பலனாகிய ஆகாரத்தையும் தருவார்; அது கொழுமையும் புஷ்டியுமாய் இருக்கும்; அக்காலத்திலே உன் ஆடுமாடுகள் விஸ்தாரமான மேய்ச்சலுள்ள ஸ்தலத்திலே மேயும்;*

*ஆமோஸ் 9:13 இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், திராட்சப்பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனையும் தொடர்ந்துபிடித்து, பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிறதும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

மனிதர்கள் தாங்கள் செய்யும் வேலைக்கு பலமடங்கு விளைச்சலை பெற்றுக்கொள்வார்கள். மனிதன் தான் விதைப்பதற்கான பலனை பல மடங்காக அறுவடை செய்வான். எல்லாவற்றிலும், ஆசீர்வாதமான சூழ்நிலை நிலவும். மனிதர் செய்யும் வேலைகள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும். தேவன் பூமியெங்கும் ஆசீர்வாதங்களை கொடுப்பார்.



### உபயோகமற்ற நிலங்கள் எல்லாம் உபயோகமான நிலங்களாக மாற்றப்படும்

*(ஏசா32:16-18;49:19;52:9; 61:4-5; எசே 36:8-38;ஆமோஸ் 9:14-15;அப் 15:13-18 ).*



*ஏசாயா 32:15 உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்; அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும்.*

இப்போது இருக்கிற உபயோகமற்ற தரிசு நிலங்கள் எல்லாம் மீண்டும் மாற்றப்பட்டு உபயோகமான நிலங்களாக இருக்கும். பூமியில் உபயோகமில்லாத நிலங்கள் என்று ஒன்றும் இருக்காது. வனாந்திரங்கள் எல்லாம் செழிப்பான விளை நிலங்களாக மாறும்.

## எருசலேமுக்கு செல்ல பெரிய நெடுஞ்சாலை *( ஏசா 11:16; 19:23-25; 35:7-8 ).*



*ஏசாயா35:8 அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை.*

எகிப்தில் இருந்து இஸ்ரவேல் தேசம் வழியாக அசீரியாவுக்கு **ஒரு பெரிய நெடுஞ்சாலை** அமைக்கப்படும். இந்த நெடுஞ்சாலை **“ பரிசுத்த வழி ”** என்று அழைக்கப்படும். எருசலேமுக்கு செல்லுகிறவர்களும், பண்டிகைகளை ஆசரிக்கவும் மற்ற காரியங்களுக்காகவும் எருசலேமுக்கு செல்லுகிறவர்களும் இந்த வழியாக எளிதாக செல்ல முடியும். மீட்கப்பட்டவர்கள் மாத்திரமே இந்த வழியில் செல்ல முடியும். மற்றவர்களுக்கு இதில் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருக்கும். இவ்வழி மிகவும் பாதுகாப்பானதாகவும் பயணிக்க எளிதாகவும் இருக்கும்.

## இஸ்ரவேல் ஜனம் முழுவதும் கூட்டப்பட்டு தேவனுடைய ஜனமாக பெருகி இருக்கும்



*ஓசியா 1:10 என்றாலும், இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப்போலிருக்கும்; நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்.*

சிதறிப்போய் இருக்கும் யூத ஜனம் முழுவதுமாக இஸ்ரவேலில் கூட்டப்பட்டிருக்கும் ***( ஓசியா 1:11 ).*** தேவனுடைய ஆசீர்வாதத்தின் படி அவர்கள் பலுகிப்பெருகுவார்கள். ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்கள் அழைக்கப்படுவார்கள்.

## மனித இனப்பெருக்கம்



*மத் 22:30 உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்;*

முதலாம் உயிர்த்தெழுதலில் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் அனைவரும் நித்தியமாக ஆளுகை செய்கிறவர்களாக இருப்பார்கள். அவர்கள் திருமணம் செய்வதும் இனப்பெருக்கம் செய்வதும் இல்லை. அவர்கள் தேவதூதரைப்போல இருப்பார்கள்.

மற்ற மக்கள் அனைவரும் திருமணம் செய்து குழந்தைகள் பெற்று தேவனுடைய கட்டளையின்படி *( ஆதி 1:26-28, சக 8:4 )* பலுகிப்பெருகி பூமியை நிரப்பிக்கொள்வார்கள்.

## மரணம்



*ஏசாயா 66:22 அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்துகொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்.*

ஆயிர வருட அரசாட்சியில், இயேசுவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கு மரணம் இல்லை. அவர்கள் மரிக்க மாட்டார்கள்.

யாரேனும் மரண தண்டனைக்கு ஏதுவான பாவம் செய்தால் அவர்களுக்கு மாத்திரம் மரண தண்டனை கொடுக்கப்படும் *( ஏசாயா 2:2-4; 11:3-5; மீகா 4 )*



## பூமி ஒரு பூங்காவனம் போல இருக்கும்

*ஏசாயா 41:19 வனாந்தரத்திலே கேதுருமரங்களையும், சீத்தீம்மரங்களையும், மிருதுச்செடிகளையும், ஒலிவமரங்களையும் நட்டு, அவாந்தரவெளியிலே தேவதாரு விருட்சங்களையும், பாய்மரவிருட்சங்களையும், புன்னைமரங்களையும் உண்டுபண்ணுவேன்.*

பூமியெங்கும் நன்றாக செழிப்பாக வளரும் மரங்கள் காணப்படும். கனிகள், கொடிகள், இலைகள் என்று பூமி மரங்கள் செடிகளால் நிறைந்திருக்கும் *( ஏசாயா 51:3; 55:13 ).* பூமியே ஒரு பெரிய தோட்டம் போல அழகாக செழிப்பாக சாங்கள் இல்லாமல் இருக்கும்.



## உணவுக்கு ஒரு குறையும் இருக்காது

*யோவேல் 3:18 அக்காலத்தில் பர்வதங்கள் திராட்சரசத்தைப் பொழியும், மலைகள் பாலாய் ஓடும், யூதாவின் ஆறுகள் எல்லாம் பிரவாகித்து ஓடும்; ஒரு ஊற்று கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டுச் சித்தீம் என்னும் பள்ளத்தாக்கை நீர்ப்பாய்ச்சலாக்கும்.*

மக்களுடைய உணவுக்கு ஒரு குறைவும் இருக்காது. பழங்கள், பால், திராட்சை ரசம், மற்ற உணவு தானியங்கள் பூமியெங்கும் நன்றாக விளையும். மக்களுடைய உணவுத்தேவையில் ஒரு குறைவும் இருக்காது. மனிதர்கள் நன்றாக சாப்பிட்டு ஆரோக்கியமாக இருப்பார்கள்.



--------------------------

**ஆயிரம் வருட அரசாட்சி... சரித்திரத்தில் சமாதானம் விரும்பிய அனைவரும் கனவு கண்ட ஒரு ஆட்சி.... தேவனால், இயேசுவால், பரிசுத்தவான்களால் ஆளப்படும் சுக அட்சி.**
**நித்திய வாழ்க்கைக்கான ஒரு உதாரணம். இது தொடக்கம்.... பின் முடிவில்லாத நித்தியம்.**

**தேவன் மனிதனை ஆளுவதற்காகவே சிருஷ்டித்தார் *( ஆதி 1:28; சங் 8:6; 115:16 ).* மனிதன் தன் பாவத்தினால் தன் ஆளுகையை சாத்தானிடம் இழந்து போனான். மறுபடியும் பிறந்து எடுத்துக்கொள்ளப்படுகிற, கிறிஸ்துவுக்குள் மரித்த பரிசுத்தவான்கள் அனைவரும் மீண்டும் ஆளுகை செய்வார்கள். நித்தியமாக ஆளுகை செய்வார்கள்.**

**“நான் இயேசு ராஜாவோடு ஆளுகை செய்யப்போகிறவன்” என்ற விசுவாச உறுதியோடு இப்போது ஜீவிப்போம். இரட்சிக்கப்படாமல், ஆயிர வருட ஆட்சியில் பங்கு பெறாமல் நரகத்துக்கு சென்று கொண்டிருக்கிறவர்களை இரட்சிப்புக்குள் நடத்துவோம்.**

**ஆயிர வருட அரசாட்சியில் இயேசுவின் ராஜாக்களாக, அவரது முகம் பார்த்து, அவரது குரல் கேட்டு, அவரது நேரடி அன்பு கட்டளைகளை செயல் படுத்தி ஆளுகை செய்து நித்தியமாக வாழ............**

**ஆயத்தமாயிருப்போம்,**

**மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம்.**

**ஆமென்.**

***குறிப்பு:*** இதன் தொடர்ச்சியாக - கோக் மகோக் யுத்தம், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு, புதிய வானம் புதிய பூமி, புதிய எருசலேம் - போன்ற வேதபாடங்கள் வெளியிடப்படும். தயவு செய்து தொடர்ந்து படித்து பயனடையுங்கள்.
இதற்கு முன்பு தொடர்ச்சியாக வேதாகம ஆட்சி முறைக்காலங்கள், சபை எடுத்துக்கொள்ளப் படுதல், அந்திக்கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அர்மகெதோன் யுத்தம், புறஜாதிகளுக்கான நியாயத்தீர்ப்பு ஆகிய வேதபாடங்கள் வெளியிடப்பட்டுள்ளன. படித்து பயனடையுங்கள்.

**நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**Bro D.Vergin Kumar.**

If you need any clarifications, if you have any doubts kindly contact me at deeveekumar@yahoo.com Ph: 968 25572195, 99663557.

**Resources;** International Standard Bible Encyclopedia, The Bible Exposition commentary - New Testament, Dakes bible commentary, Andrew Wommack Bible commentary, Vine's Expository Dictionary of Old Testament Words, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible Concordance, Vincent's Word Studies in the New Testament, Scofield's Bible Dispensational Plan. Wuest's word studies from the Greek New Testament. The Biblical Illustrator (New Testament) etc. All Bible quotes are from King James Version. In Tamil Bible, some verses may be above or below than the mentioned English Bible verse

-----------------------